21st December 1956]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பூச்சிகளைத் தடுப்பதற்கு வேண்டி தொடர்ந்தாற்போல் பல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவருகிறது. இம்மாதிரி பூச்சிகளைக் குறைப்பதற்கு வேண்டிய கனம் அங்கத்தினரின் யோசனையும் கேட்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM : இந்த பூச்சி கண்ட உடன் மருந்து தெளித்தால் தான் அதைப் போக்க முடியும். ஆனால் இந்த மருந்து அரை விலைக்கு விவசாயிகளுக்கு கிடைப்பதற்கு கலெக்டருடைய அறிக்கை வந்த பிறகுதான் மருந்தை வாங்க முடிகிறது. ஆகவே, இந்த முறையை மாற்றி ஜில்லா அதிகாரிகளுடைய உத்திரவின் பேரில் விவசாயிகளுக்கு அரை விலைக்குக் கிடைக்கவேண்டும். இதைப்பற்றி டைரக்டெர் ஆப் அக்ரிகல்சர் (Director of Agriculture) சிபார்சு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதன் பேரில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய வேண்டுகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரசாங்கம் இதற்கு வேண்டிய முடிவு செய்யப்பட்டுவிட்டது என்றே சொல்லலாம். இனி அதிக தொல்லை இருக்காது என்று சொல்லிக்கொள்கிறேன்.

Admissions to Medical Colleges

* 393 *Q.*—**SRI P. JEEVANANDAM :** Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the Government have issued any order to the effect that candidates whose applications for admission into the Medical Colleges have been rejected twice, cannot apply for admission for the third time?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir.

SRI A. GOVINDASAMI NAYAGAR : மெடிகல் காலேஜில் அட்மிஷன் வாங்குவதற்காக தென் ஆற்காடு ஜில்லாவை சேர்ந்தவர்கள் பலர் சென்னை நகரத்தில் இருந்து கொண்டு சென்னை மாகாண வாசிகள் என்று கள்ள சர்டிபிகேட் வாங்கி கொடுத்து அட்மிஷன் வாங்கி வருகிறார்கள். இதைப்பற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த கேள்விக்கு பதில் சொல்லுவதற்கு முடியாது. இப்போதுள்ள கேள்வி இரண்டு வருஷம் இண்டர்வியூ கழிந்த பின் தேர்ந்தெடுக்கப்படாதவர்கள் மூன்றாவது தடவை மனு செய்து கொள்ள தடை ஏன் என்பது பற்றிதான்.

SRI S. RAMALINGAM : ஸார், இரண்டு தடவை இண்டர்வியூ கழிந்தவர்கள் மூன்றாம் தடவையாக மனு செய்யக்கூடாது என்று இருந்தும் மீண்டும் மீண்டும் அவர்கள் மனு செய்வது அவர்களின் சக்தியை காட்டுகிறது. ஆகவே புதிதாக கொண்டுவந்திருக்கும் இந்த உத்தரவை ரத்து செய்வார்களா என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இரண்டு தடவையிலும் தேர்ந்தெடுக்கப்பட வில்லை யென்றால் அவர்கள் ரொம்ப மோசமாக மார்க் எடுத்திருக்கிறார்கள் என்றுதான் அர்த்தம்.

SRI K. VINAYAKAM : இரண்டு முறையும் தேர்ந்தெடுக்காததின் காரணம் மார்க்குகளை மாத்திரம் பொறுத்தது அல்ல, பெர்ஸனாலிடி டெஸ்ட் (Personality test) வைவா வோஸி (Viva voce) முதலியவைகளிலும் சரிவர மார்க்கு பெறாததினால் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்று தெரிகிறது. ஆனால் தேர்ந்தெடுக்கப்படாத மாணவர்கள் அடுத்த வருடத்திற்குள் உடற்பயிற்சி செய்துகொண்டு மீண்டும் நல்ல தகுதியான உடலை வளர்த்துக் கொண்டு வந்தால் அப்போது அவர்களுக்கு அட்மிஷன் அளிப்பதற்கு இந்த சட்டம் இடமளிக்க வில்லை. ஆதலால் இந்த சட்டத்தை மாற்றுதவற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா என்று கேட்கிறேன்.

[21st December 1956

THE HON. SRI M. A. MANICKAVELU : மெடிக்கல் காலேஜ் அட்மிஷனுக்கு கடந்த வருடம் 296 வீட்டுக்கு 1,352 அப்ளிகேஷன் வந்தது. இந்த வருடம் 300 வீட்டுக்கு 1,465 அப்ளிகேஷன் வந்தது. இப்படியாக அநேக அப்ளிகேஷன் வந்துகொண்டிருக்கிறது. இதைக் குறைக்க வேண்டியிருக்கிறது. அதல்லாமல் பெர்ஸனலிடி எல்லாம் திடீர் என்று வரக்கூடியது அல்ல. மீசை வேண்டுமானல் திடீரென்று வளர்த்து விடலாம். உடலே அப்படி வளர்க்க முடியாது. (சிரிப்பு.)

SRI V. R. NAGARAJAN : இரண்டு தடவை மனுப்போட்டும் கிடைக்காத அபேட்சகர்கள் மூன்றுவது தடவை மனுப்போட்டல் அவர்கள் பின்னுல் நல்ல பயிற்சியுள்ள டாக்டர்களாக வரலாம். அப்படி அவர்கள் மூன்றுவது தடவையாக மனுச் செய்துகொண்டால் அவர்களே அவசியம் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று அரசாங்கம் ஒரு உத்தரவு பிறப்பிக்கக் கூடாதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அப்படியானுல் கனம் அங்கத்தினருக்கும் எனக்கும் ஒரு சமுத்திர அளவு வித்தியாசம் இருக்கிறது.

SRI K. VINAYAKAM : கனம் மந்திரி சொல்லுகிற பதிலிலிருந்து ஒன்று நன்கு தெரிகிறது. மனுக்கள் அதிகமாக வருகிறது என்று. ஆதலால் இரண்டாவது தடவை மனுப் போட்டவர்கள் ஏன் மூன்றுவது தடவை மனுப் போடக்கூடாது ? அப்படிச் சொல்வது சரியல்ல. அதனுல் அதிகப்படியான கல்லூரிகளே வைத்திருந்தால் அவைகளில் மாணவர்கள் சேர்ந்து பயிற்சி பெறுவதற்கு வசதியாக இருக்கும் அல்லவா ? அப்படி அதிகப்படியான கல்லூரிகளே அமைக்க அரசாங்கம் முயற்சிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதைப்பற்றியும் அரசாங்கம் கவனித்து அதில் கவனம் செலுத்தி வருகிறது. இன்னும் அதிகப்படியான கல்லூரிகளே அமைப்பதற்கு அரசாங்கம் யோசனே செய்துகொண்டிருக்கிறார்கள்.

SRI M. PALANIYANDI : அதிகப்படியாக மனுக்கள் வருகின்றன என்று தோன்றுகிறது. ஏனென்றல் மூன்றுவது தடவையாகக்கூட மனுக்கள் வருவதாகத் தெரிகிறது. அதனுல் ஆயிரக்கணக்கான மனுக்கள் வருவதாகத் தெரிகிறது. பர்ஸனலிடி இல்லாத காரணத்தாலோ அல்லது மார்க்குகள் இல்லாத காரணத்தாலோ அநேகம் மனுக்கள் நிராகரிக்கப்படுகின்றன. ஆயிரக்கணக்கான மனுக்கள் வருவதால் மூன்றுவது தடவையும் மனுச் செய்து கொண்டால் ஏன் அவர்களே எடுத்துக் கொள்ளக் கூடாது. அதே சமயத்தில் அவர்கள் திடமுள்ளவர்களாக இருக்கலாம். தற்போது கனம் மந்திரி அவர்கள் அரை மீசையிலிருந்து முறுக்கு மீசைக்கு வருவதுபோல் மாணவர்களும் திட முள்ளவர்களாக வருவதற்கு இடம் இருக்கிறது. அதனுல் அவர்கள் மூன்றுவது தடவை மனுச் செய்துகொண்டாலும் ஏன் அவர்களே எடுத்துக்கொள்ளக் கூடாது ?

Hotel workers

*394 *Q.*—SRI S. RAMALINGAM (on behalf of Sri A. K. Subbiah) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether a deputation of the Madras City Hotel Workers' Union waited on the Minister on 29th of September 1956 and presented a memorandum; and

(*b*) if so, the action taken on the memorandum?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) In the memorandum it has been urged that the proposed legislation for hotel workers should be expedited. Since the ques-